**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

**MCOP. No.139/2016 c/w MCOP153/2016 Date: 15.09.2022**

பெயர் -புவனேஸ்வரி- (**PW**2)

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை ( சத்தியபிரமாணத்தின் பேரில்)

வழக்கு விபத்து எடப்பாடி - குமாரபாளையம் மெயின் ரோட்டில் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். விபத்தானது யாருடைய அஜாக்கிரதை காரணம் என்றால் கார் காரருடைய அஜாக்கிதை காரணம். நான் சென்ற இரு சக்கர வாகனத்தை என்னுடைய கணவர் வெங்கடேஷ் என்பவர் தான் ஓட்டிச் சென்றார் என்றால் சரிதான். என்னுடைய கணவர் அப்போது வாகனத்தை மெதுவாக தான் ஓட்டி வந்தார் அவர் மீது எந்த வித தவறும் இல்லை என்றால் சரிதான். அவர் மீது எந்த தவறும் இல்லாததால் என் கணவர் ஓட்டி வந்த வாகனத்தின் காப்பீடு நிறுவனம் இழப்பீடு கொடுக்க வேண்டிய அவசிய் இல்லை என்றால் சரிதான். விபத்தினால் ஏற்பட்ட காயம் எனக்கு சரியாகிவிட்டது என்றால் சரிதான். அதனால் எனக்கு எந்த வித ஊனமும் எற்படவில்லை என்றால் சரிதான்.

4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை ( சத்தியபிரமாணத்தின் பேரில்)

எடப்பாடி - குமாரபாளையம் ரோடானது வடக்கு - தெற்கு நோக்கி செல்கிறது என்றால் சரிதான். வெள்ளுத்து பெருமாள் கோவில் சாலையானது கிழக்கு - மேற்கு நோக்கி வந்து மேற்படி சாலையில் சேர்கிறது என்றால் சரிதான். முதன் முதலில் விபத்து ஏற்படுத்திய காரை வெள்ளுத்து பெருமாள் கோவில் சாலையில் பார்த்தேன். காரை எவ்வளவு துரத்தில் இருந்து பார்த்தேன் என்றால் சுமார் 10 அடி துரத்தில் இருந்து பார்த்தேன். எங்கள் மீது மோதியதாக சொல்லப்படும் வாகனம் எங்கள் வண்டியின் எந்த பகுதியில் மோதியது என்றால் ஓட்டுநர் கால் வைக்கும் பகுதியில் அதாவது வண்டியின் இடது புறம் மோதியது. சம்பவம் நடந்த பகுதி நேரான பகுதி என்றால் சரிதான். எந்த இடத்தில் விபத்து நடந்தது என்ற இடத்தை காட்டும் மாதிரி வரைபடத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதை வாங்கி தாக்கல் செய்ய தயராக உள்ளேனா என்றால் இல்லை. எதிர் திசையில் வண்டி வருவதை பார்த்தும் என் கணவர் பிரேக் போட்டு நிறுத்தினாரா என்றால் இல்லை. விபத்து நடந்த சமயத்தில் என் கணவர் சுமார் 60 கி.மீ வேகத்தில் சென்றார். விபத்து நடந்த உடன் சுமார் 5 நிமிடம் தான் மாருதி ஆம்னி வேன் சம்பவ இடத்தில் நின்றது. அதன் பிறகு சென்றுவிட்டது. விபத்து நடந்த சமயத்தில் அருகில் 6 முதல் 7 நபர்கள் வந்து விட்டார்கள். வழக்கு சம்பந்தமாக தேவூர் போலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் குற்ற எண் பற்றி எனக்கு தெரியாது. குற்ற வழக்கானது எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு நியாபகம் இல்லை. தேவூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சிவதாஸ். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை என்று எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் MISTAKE OF FACT என்று முடிக்கப்பட்ட போது தெரிந்து கொண்டேன். Mistake of fact என்று முடிக்கப்பட்டதாக யார்

கூறினார்கள் என்றால் என்னுடைய வழக்கறிஞர் கூறினார். இறுதி அறிக்கையை நான் படித்து பார்த்தேனா என்றால் என்னுடைய கணவர் தான் படித்து பார்த்தார். அனைத்து சாட்சிகளையும் சம்பவ இடம் சென்று விசாரிக்கவில்லை என்று எப்போது தெரிந்து கொண்டேன் என்று ஞாபகமில்லை. விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்யப்பட்டதா அல்லது விசாரிக்காமல் பதிவு செய்யப்பட்டடதாக என்று தெரியாது. அனைத்து ஆவணங்களும் எங்களுக்கு எதிராக போலிசாரல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறும் நிலையில் என்னென்ன ஆவணங்கள் எங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், அது நியாபகம் இல்லை. இந்த வழக்கு பிழையுடையது என்று இறுதி அறிக்கை தாக்கல் சம்பந்தமாக அறிவிப்பு வந்ததா என்றால் வந்தது. நீதிமன்றத்தில் இருந்து வந்தது என்றால் சரிதான். ம.சா.ஆ.19 எனது கணவர் பெயருக்கு தான் வந்தது. அதன்படி 04.03.2017 ல் நீதிமன்றத்திற்கு சென்று ஆஜரானரா என்றால் ஆனார். 29.06.2017 ல் இரு தரப்பு வாதமும் குற்றவியல் நீதிமன்றத்தில கேட்கப்பட்டதா என்றால் ஞாபகமில்லை. அதன்படி 14.07.2017 ல் இறுதி அறிக்கை முடிக்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. மேற்படி வழக்கு குற்றவியல் நீதிமன்றத்தில் அவ்வழக்கு விபத்து நிலுவையில் இருக்கிறதா என்றால் உள்ளது. அந்த வழக்கு என்ன நிலையில் உள்ளது என்றால் ஞாபகமில்லை. குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு என்ன நிலையில் உள்ளது என்பதை காண்பிக்க ஆவணங்களை எடுத்து காண்பிக்க தயராக உள்ளேனா என்றால் உள்ளேன். நான் கூறும் ஆம்னி வேன் இந்த விபத்தில் சம்பந்த படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கணவரே வேகமாக இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்று கீழே விழுந்து விபத்து எற்படுத்தினார் என்றால் சரியல்ல. ஆகவே தான் தேவூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட இவ்வழக்கு பொருண்மை பிழை என்று குறிப்பிட்டு சங்ககிரி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரியல்ல. 4 ம் எதிர்மனுதாரரை பொருத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது என்றால் சரியல்ல.

Sd/-புவனேஸ்வரி

Sd/-S. உமா மகேஸ்வரி,
சார்பு நீதிபதி.